


முதல்வர் ஸ்டாலின்



அமைச்சர் சிவசங்கர்



இறையன்பு ஐ.ஏ.எஸ்., பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்., நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.,



பூங்குழலி ஆய்வாளராக இருந்தபோது இப்படியொரு **FIR** அங்குள்ள ஒட்டன்சத்திர காவல் நிலையத்தில் நிலுவையில் இருந்தபோது பூங்குழலிக்கு எப்படி பதவி உயர்வு கொடுக்கப்பட்டது? (விபரம் உள்ளே)

அனுப்புனர் :


N. நெல்லை கோபால் ,
மூத்த பத்திரிகையாளர்,
771/1, சாம்டவர், முனுசாமி சாலை ,
கே.கே.நகர். சென்னை – 600 078.
9994478389


பெறுநர் :

உயர்திரு. மாண்புமிகுக்கள், அரசு செயலர்கள், **DGP** மற்றும் மாநகர காவல் ஆணையர், ஊழல் தடுப்பு பிரிவு இயக்குனர், போக்குவரத்து ஆணையர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது

அய்யா, மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபாலின் பணிவான வணக்கங்கள்.

பொருள்: இறைச்சிக்காக கடத்தப்படும் மாடுகளை ஏற்றிச் செல்லும் நீளம், அகலம் அதிகம் கொண்ட, வாகனங்கள் பெரும்பாலும், Ashok Leyland நிறுவனத்தை சேர்ந்தது. இந்த வாகனம் பொதுச்சாலையில் இயங்குவதற்கு அந்த வாகன நிறுவனத்தினரால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் Dimensions, Weights, Performance and technical Specifications எல்லாவற்றையும் மீறி, அந்தந்த வாகன நிர்வாகிகளால் alteration (Modification) செய்யப்பட்டு, விதிகளுக்கு மீறி பொதுச் சாலையில் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு வகைகளிலும் விபத்துக்கள் ஏற்பட்டு, மனித உயிர்கள் உட்பட பல்வேறு உயிர்களும் கொத்து கொத்தயாய் பலிகள் ஆகி வருகிறது. இப்படி இயங்கிவரும் 1612, மாடலுக்கான வாகனத்தின் நீளம் 18 1/2 அடி நீளமும் Pumber to pumber 24 அடியாகவும் இருக்க வேண்டும் என்பது விதியாக இருந்தாலும், இது போன்ற வாகனங்களில் 30 to 38, 40, அடிக்கு பாடி அமைத்திருப்பதும், அதேபோல் அகலம் அதிகபட்சமாக 8 அடியாக இருக்கலாம் என்றாலும் 9 அடிக்கு மேலாகவும், பத்து அடிக்கு உள்ளாகவும் இருப்பதால் ரோட்டை அடைத்து செல்கிற நிலையில் இருப்பதால் விபத்துக்கள் தொடரும் சூழல்கள் ஏற்பட்டு உயிர்பலிகளும், அதிகரிக்கின்றன. இப்படி 1616,1618, 2012, போன்ற மாடலுக்கான வாகனங்கள் மாடுகள் கடத்துவதற்காகவே நானூறு ஐநூறுக்கு மேற்பட்ட வாகனங்கள் திண்டுக்கல் மாவட்டமான ஒட்டன்சத்திர பகுதியில் இருந்து இயங்கிவருகிறது.

இது போன்ற வாகனத்தில் ஏறி, நூலிழை கூட இடமில்லாத அளவுக்கு மிகமிக நெருக்கமாக, ஒன்றொடு ஒன்று உரசியபடி கட்டப்படிருக்கும் மாடுகளை கடந்து வாகனத்திற்குள் உள்ளே சென்று சோதனைகள் மேற்கொள்ள முடியாத நிலைகளை பயன்படுத்தி, இதுபோன்ற வாகனத்தில் சிலர் கஞ்சா மற்றும் போதை வஸ்துகளை கடத்துவதற்கு போக்குவரத்துத்துறை சார்ந்த சில அதிகாரிகள், குறிப்பாக செயலாக்கப்பிரிவு RTO அதிகாரிகளால் உதவப்பட்டு வருவதால் அந்த அதிகாரிகள் மீது உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கைக்கு கோருவது தொடர்பாக

கடந்த சில வருடங்களுக்கு முன்பு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் RTO அலுவலகத்தின் பகுதி அலுவலகத்தில், ஆய்வாளராக பணியாற்றி வந்தவர்தான் தற்போது சென்னை தெற்கு பகுதியின் செயலாக்க பிரிவில் உள்ள RTO பூங்குழலி ஆவார்.



டிஜிபி சைலேந்திரபாபு



விஜிலென்ஸ் இயக்குனர் கந்தசாமி ஐ.பி.எஸ்.

பூங்குழலி ஆய்வாளராக பணியாற்றிய இந்த ஒட்டன்சத்திர பகுதியில் இருந்து இறைச்சிக்காக ஏற்றிச் செல்லப்படும் நீளம், அகலம் அதிகம் கொண்ட வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு, ஒரு வாகனத்திற்கு ரூபாய் 25,000 பூங்குழலியால் லஞ்சமாக பெறப்பட்டு, அவரால் FC–யும் கொடுக்கப்பட்டு வந்தது. இதனால் விபத்துக்கள் பெருகிவருகிறது என என்னால் அரசு செயலர்கள் மற்றும் விஜிலென்ஸ், போக்குவரத்துசம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கடந்த 28.02.2019, மற்றும் 01.03.2019லும் என்னால் புகாராக எடுத்துச் செல்லப்பட்டது.

இதுகுறித்து அப்போது ஒட்டன்சத்திரம் பகுதி (unit ) RTO அலுவலகத்திற்கு பொறுப்பு அதிகாரியாக இருந்த, திண்டுக்கல் RTO ஆனந்த் மற்றும் விஜிலென்ஸ் போலிசார் ஆகியோர் எடுத்த அதிரடி நடவடிக்கையில், அன்று ஆய்வாளராக இருந்த பூங்குழலி கையும் களவுமாக சிக்கிகொண்டார்.

ஆய்வாளர் பூங்குழலியால் அன்று வழங்கப்பட்டிருந்த தகுதிச்சான்றுகளுக்குரியா இந்த நீளம், அகலம் அளவுகளில் உள்ள வாகனங்களுக்கும் CFX கொடுக்கப்பட்டு FC –க்கான சான்றுகள் ரத்து செய்யப்பட்டு, வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டு,துரித நடவடிக்கைகள் மேற்கொண்டதால், தண்டைனை குற்றமாக ஆய்வாளர் பூங்குழலி நாகர்கோவில் செயலாக்க பிரிவுக்கு பணியிட மாற்றமும் செய்யப்பட்டார்.



Admin வெங்கட்ராமன்



பூங்குழலி RTO

அதன் பின் சென்னைக்கு பணியிட மாற்றம் கோரி எவ்வளவோ முயன்றும், பூங்குழலியால் சென்னைக்கு வர முடியவில்லை. இதனை தொடர்ந்து அவர் மீது துறை ரீதியாக உள்ள பல வழக்குகள் பணம் பேரங்களால் பூங்குழலியின் கோப்புகள் மீது நடவடிக்கை எடுக்காமல் முடிக்கப்பட்டது. இப்படி சில புகார்கள் முடித்தும், பல வழக்குகள் முடியாமலும், அதனை எல்லாம் மறைத்து பதவி உயர்வுக்கான கோப்புகளை மேலே எடுத்து, அட்மின் வெங்கட்ராமன்க்கு (10 லட்சம், DTC நாகஜோதிக்கு (6லட்சம்), போக்குவரத்து ஆணையர் ஜவஹர் IASக்கு (25 லட்சம்) மற்றும், இவரது கோப்புகளுக்கான விசாரணை அதிகாரிகளுக்கும் குறிப்பட்ட சில குறைவான லட்சங்களும் நிர்ணயிக்கப்பட்டு, கொடுக்கப்பட்டதால் இவரது பதவி உயர்வுக்கான கோப்புகள் நகர்த்தப்பட்டு, கடந்த 28–07–2021–ல் பூங்குழலிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. (பார்க்க: பதவி உயர்வு பட்டியல்) பூங்குழலியும் சென்னை தெற்கு பகுதியின் செயலாக்க பிரிவுக்கு (Enforcement ) பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இப்படி இவர் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கைக்காக, செயலாக்க பிரிவிலே சுழண்டு வந்த பூங்குழலி, தற்போது சென்னைக்குள் உள்ள ஏதாவது RTO அலுவலகத்தில் பதவி ஏற்று விட வேண்டும் என்ற விடா முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வந்த வண்ணமாக உள்ளது.



நீள அகல அளவுகளில் விதி மீறப்பட்ட வாகனங்கள்

இவர் ஒட்டன்சத்திரம் RTO –ல் ஆய்வாளராக பணிபுரிந்த போது , ஒரு முறைகேடான விபத்தை செய்ததில், அங்குள்ள காவல் நிலையத்தில் ஒரு FIR –வழக்கே நிலுவையில் இருந்த நிலையில் இந்த அரசு அதிகாரியான பூங்குழலிக்கு எப்படி பதவி உயர்வு கொடுக்கப்பட்டது ? (பார்க்க – FIR)

இப்படி இவரது, அதிகாரத்தை விரிவுபடுத்தி, செயலாக்க பிரிவில் இருந்து ரெகுலர் பணிக்கு கூடுதல் அதிகாரத்தோடு, சென்னையின் முக்கிய பகுதிகளான RTO–ல் இவர் நியமிக்கப்பட போகிறார் என்றால், இந்த போக்குவரத்து துறையில் எத்தனை பெரிய ஊழல்கள் நடைபெறுகிறது என்பதை, இனி நாம் அரசின் தலைமைக்கு சொல்லி தெரிய வேண்டியதில்லை என நம்புகிறோம்.

மேலும், இது போன்ற ஊழல் அதிகாரிகளின் செயல்பாடுகளால் மட்டுமே விபத்துக்கள் பெருகிவருகிறது. எனவே இவர்களை போல் உள்ள ஊழல் அதிகாரிக்கு கூடுதலான அதிகாரம் கொண்ட ரெகுலர் RTO–ற்கான பணிக்கு பணியிட மாற்றம் கொடுக்கப்பட்டால், எப்படி விபத்தை தடுப்பதற்கான வழிகளை உருவாக்க முடியும் என்ற கேள்விகள் எழும் நிலையே ஏற்படுகிறது.


எனவே, விபத்தை தடுக்கும் நோக்கில் பூங்குழலிக்கு எக்காலமும் RTO அலுவலகத்திற்கான பணியிட மாற்றங்களை வழங்க கூடாது என பொதுமக்கள் சார்பாகவும், நம்மாலும் பணிந்து கோரப்படுகிறது.

பழி தீர்க்க சிறை பிடிக்கப்பட்ட இளங்கோவின் வாகனம் பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்ட காட்சி.





அதுமட்டுமல்லாது, ஒரு அரசு அதிகாரி மீது காவல் FIR வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், எந்த வித விசாரணையில் எதற்காக, ஏன், எப்படி என்ற வகையில் பூங்குழலியின் கோப்புகள், எப்படி அவருக்கு சாதகமாக முடிக்கப்பட்டது என்ற கேள்விகளை எழுப்பியும், இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாம் மறைத்தே பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது, என்பதை அதிரடியான ஆணையர் தெரிந்து கொள்கிறபட்சத்தில் போக்கு வரத்தின் நிர்வாக அதிகாரியான வெங்கட்ராமன் உடனே பணியிடை நீக்கம் செய்யப்பட்டால்கூட ஆச்சிரியப் படுவதற்கில்லை என்பது தான் உண்மை.

ஆம், பூங்குழலி மீது நம்மால் பல குற்றச்சாட்டுகளை நாம் கூறியிருக்கையில், பூங்குழலியின் கோப்புகளை முடிப்பதற்கு முன்புவரைகூட, பூங்குழலி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன்படி நாம், தகவல்கள் கோருகிற போதுகூட, அது ‘மந்தம்’ அதாவது ரகசியம்



| | | | |
|---|---|---|---|
| 2. | C. Sivakumar, Motor Vehicles Inspector Grade–I, O/o. the Deputy Transport Commissioner (Enf), Villupuram | Regional Transport Officer, Tindivanam | E.S. Murugesan |
| 3. | N. Munuswamy Motor Vehicles Inspector Grade–I, Unit Office, Palakkodu | Regional Transport Officer, Gobichettipalayam | Existing Vacancy |
| 4. | K.V.K. Samy P.A. to Regional Transport Officer, Dharmapuri | Regional Transport Officer, Krishnagiri | R. Venkatesan |
| 5. | S. Balamurugan Motor Vehicles Inspector Grade–I, O/o. the Deputy Transport Commissioner (Enf), Vellore | Regional Transport Officer, Coimbatore (South) | S. Saravanan |
| 6. | R. Chitra Motor Vehicles Inspector Grade–I, Regional Transport Office, Coimbatore (Central) | Regional Transport Officer, Madurai (Central) | Existing Vacancy |
| 7. | M. Poonguzhali Motor Vehicles Inspector Grade–I, Regional Transport Office (Enf), Nagercoil | Regional Transport Officer, (Enf), Chennai (South Zone) | K.V. Karthalingan |
| 8. | K. Sathyakumar Motor Vehicles Inspector Grade–I, Regional Transport Office, Tirunelveli | Regional Transport Officer, Coimbatore (Central) | J.K. Baskaran |
| 9. | A. Mohan, P.A. to Regional Transport Officer, Nagapattinam | Regional Transport Officer, Chennai (South East) | Existing Vacancy |

3. The appointment and postings ordered in respect of Sl.No.1 to 9 in paragraph 2 above are purely temporary and the same is without fixing their seniority and subject to the outcome of the Special Leave Petition filed before the Hon'ble Supreme Court of India in SLP Nos.28670 and 22717–22719 of 2015. Their seniority will be fixed only after disposal of the above Special Leave Petitions.



ABSTRACT

Public Services – Tamil Nadu Transport Service – Temporary appointment and postings to the Motor Vehicles Inspectors, Grade–I and Personal Assistant to Regional Transport Officer/Deputy Transport Commissioner/State Transport Authority as Regional Transport Officers – Orders – Issued.

Home (Transport–II) Department

G.O.(D) No.824

Dated: 27.07.2021
பிலவ – ஆடி 11
திருவள்ளுவர் ஆண்டு 2052

Read:

1. G.O.(Ms) No.259, Home (Tr–II) Department, dated 01.07.2021.
2. From the Transport Commissioner, Chennai–5 Letter R.No.27729/T2/2020, dated 19.07.2021 and 23.07.2021.

*****

ORDER:

In the Government order first read above, orders have been issued for temporarily appointing Motor Vehicles Inspectors, Grade–I and Personal Assistants to Regional Transport Officer/Deputy Transport Commissioner/State Transport Authority as Regional Transport Officers under section17(1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 subject to the out come of the SLP (C) No.28670 of 2015 filed before the Hon'ble Supreme Court of India, New Delhi by the State and the SLP (C) Nos. 22717–22719 of 2015 filed before the Hon'ble Supreme Court of India, New Delhi and to fix their seniority after the disposal of the above said Special Leave Petitions.

2. In pursuance of the Government Order first read above, the following temporary appointment and postings are ordered with immediate effect:–

| Sl. No | Name & present place of working (Tvl.) | Posted as | In place of |
|---|---|---|---|
| 1. | V. Girirajan, Motor Vehicles Inspector Grade–I, Regional Transport Office, Chennai(North) | Regional Transport Officer, Pethikuppam Check Post | Existing Vacancy |

பூங்குழலி RTO பதவி உயர்வு பெற்ற உத்தரவுக்கான நகல்


காக்கப்படுகிறதாக தகவல் தெரிவிக்கப்பட்டு, நமது புகார் கோப்புகள் எழிலகத்தில் நிர்வாக அதிகாரியான வெங்கட்ராமனால் முடக்கப்பட்டது.

அதே நேரத்தில் அப்படியே சில காலங்கள் தள்ளப்பட்டு, எனது கவனத்திற்கு எதையும் தெரிவிக்காமல், என்னை விசாரணைக்கு அழைக்காமல், எழிலகத்தில் உள்ள சில உயர் அதிகாரிகள் எல்லாம் ஒன்றுகூடி, விசாரணைக்கான கோப்புகளை மூடி பல, பல லட்சங்களுக்கு மேல் கையூட்டு பெற்று, முறைகேடாக நடந்து கொண்டுள்ளனர். இப்படி நடந்த முறைகேடுகளில்தான், பூங்குழலிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு விட்டது என்பதால், எனது புகார்களையும் வாதங்களையும் ஏற்று பூங்குழலியின் பதவி உயர்வுக்காக வழங்கப்பட்ட கோப்புகள் மீது மீண்டும் விசாரித்து எனது புகாருக்குரிய நியாயத்தை வழங்கவும், பூங்குழலிக்கு வழங்கிய பதவி உயர்வை ரத்து செய்யவும் கோருகிறேன். மேலும், பூங்குழலி மீதான குற்ற கோப்புகளை நிர்த்து போகச் செய்வதற்காக, அந்த கோப்புகள் மீது முறையற்ற, உண்மையில்லா பதிவுகளை பூங்குழலியின் பதிலாக பதிவு செய்து, பூங்குழலிக்கு முறைகேடாக பதவி உயர்வு கொடுத்த அதிகாரிகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க கோருகிறேன்.

மேலும், இதன் விசாரணையில் எனக்கும் பங்களிப்பு அளித்து, எனது தரப்பு நியாயங்களையும் கோர, மீண்டும் பூங்குழலியின் பதவி உயர்வுக்கான கோப்புகளை விசாரிக்க நேர்மையான, அதிரடியான DTC மற்றும் JTCயான பொன் செந்தில்நாதன், மற்றும் சுரேஷ் அவர்கள் கொண்டு போக்குவரத்து ஆணையரை நடுவராக நியமித்து பூங்குழலியின் கோப்புகள் விசாரிக்கப்பட வேண்டும் என அரசுக்கு பணிந்து கோரப்படுவதோடு, பூங்குழலியால் பெருகப் போகும் விபத்துக்களை தடுக்கவும் பணிந்து கோருகிறேன். எனவே இது ஒரு புறம் இருந்தாலும்....

குறிப்பாக தற்போது அதிரடியான பணியில் கலக்கி வரும் நிர்மல்ராஜ் IAS அவர்கள், ஆணையராக இருக்கின்ற நிலையிலே, பூங்குழலிக்கு சென்னைக்குள் ரெகுலர் பணி கொடுக்க இருப்பதாகவும், கூறப்பட்டு வருவதால், இதனை ஒரு பேரதிர்ச்சியோடு அனைவரும் பார்த்து வருகின்றனர். இப்படியொரு மிகப்பெரும் ஊழல் அதிகாரிக்கு சென்னைக்குள் ரெகுலர் பணியா ? என பலரும் விசும்பி வருகின்றனர்.

ஆகவே, வழக்கமான அதிரடிகளை செய்து வரும், ஆணையரான நிர்மல்ராஜ் IAS அவர்களும்,



OFFICE OF THE TRANSPORT COMMISSIONER, CHEPAUK, CHENNAI – 5

Endt.R.No.027729 /T2/2021 Dated:28 .07.2021

G.O(D) No.824 Home(Tr.II) Department, Dated:27.07.2021 is communicated.


Sd/-Santosh K Misra
Transport Commissioner
Chennai-5.

To
The Officers concerned.

Copy to
1. The Additional Chief Secretary to the Govt, Home (Tr.II) Dept, Chennai-9.
2. The Accountant General, Chennai-18.
3. All Zonal Officers (By E-mail)
4. All Regional Transport Officers (By E-mail)
5. The Secretary/STAT and DR/ STAT (By e-mail)
6. The Pay and Accounts officer/ Treasury officer concerned.
7. All Officers/Section Heads in State Transport Authority (By e-mail)
8. The P.C to A.C.S/T.C / A.T.C / J.T.C(A) /J.T.C(R.S) / J.T.C(R) / D.T.C(A) / D.T.C-I / D.T.C -II(By e-mail)

/By order/

(D.Venkataraman)
Joint Transport Commissioner (A)



GOVERNMENT OF TAMIL NADU, TRANSPORT DEPARTMENT
VEHICLE INSPECTION RECORD
ORIGINAL 36529

No. B
Date 17.02.2022 TIME 2.00pm PLACE Varadharajapuram Toll Plaza
POLICE LIMIT: SII
REGISTRATION No. KA59 2057 Class of vehicle: HGV (Animal carrying vehicle)
Name and Address of the Owner: W/O Records
Permit No. /RTA Expiry F.C.Ex.: I.C.Ex.:
Tax Rs. /-paid in Red date L.O. Q.E.:
Name and Address of the Driver M. Duraisamy, S/o. Muniyandi, EB Road, Ambedkar Nagar, Madurai South.
D.L. No. TN59/2000/6162 Validity 20.07.2022 Badge No. 1135
Name and Address of the Conductor
C.L. No. Validity Badge No.
Nature of Offence

The above irregularities constitute violation of permit condition. The permit is liable to be suspended under Sec. 86(1) of the M.V. Act, 1988 for days. However, the irregularities can be compounded by paying compounding fee of Rs. /- . If the permit holder wishes to contest the charges and is not willing to compound the case, he/she should submit his/her explanation within 14 days from the date of receipt of this memo to the R.T. Officer. If no reply is received within the said period it will be presumed that he/she is willing to compound the case and the fees mentioned above will be collected forwith.

Signature of the Driver

Signature of the Checking Officer with designation

வட்டார போக்குவரத்து அலுவலர்
செயலாக்க பிரிவு
சென்னை (தெற்கு சரகம்)
சென்னை - 600 078

RECEIPT

Received from Owner/Driver/Conductor of Motor Vehicle No. The Compounding fee of Rs. for the offences indicated above.

Signature of the Checking Officer with Seal.

Received Vehicle & Key P. Vimalaprasanna (Asst) 17/02/22

பழி தீர்க்க பூங்குழலியால் எழுதப்பட்ட ஆய்வறிக்கையின் நகல்

போக்குவரத்து அமைச்சகமும், பூங்குழலி விஷயத்தில் அவரது அனைத்து கோப்புகளையும் சீர்தூக்கி பார்த்து, இவரால் பெருக போகும் விபத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும், பூங்குழலி செயலாக்க பிரிவிலே பணியாற்றிடவும், அவராலும், மற்றொரு ஆய்வாளரான திருமதி. செல்வி அவர்களாலும் ஒரு வாகனத்திற்கு 25,000 லஞ்சம் பெறப்பட்டு தகுதிச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து நடவடிக்கைக்குக் கோருகிறோம். அதே நேரத்தில் நானூறு ஐநூறு வாகனங்களுக்கு மேல் இவர்களால் எஃப்சி வழங்கப்பட்டதாலும், இந்த ஒட்டன்சத்திரம் பகுதியில் இருந்து பொதுச்சாலையில் இயக்கப்பட்டு வருவதாலும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்ட, அந்த நீள, அகல அளவுகளுக்கான வாகனங்களை எல்லாம், பூங்குழலியே சிறைப்பிடித்து நடவடிக்கை எடுக்க அதிரடியான ஆணையர் கவனத்திற்கு நம்மால் பணிந்து கோரப்படுகிறது.

மேலும் இது போன்ற நீள, அகல அளவுகளில் போக்குவரத்து விதிகளை மீறி பொதுச்சாலையில் இயங்குகின்ற இந்த வாகனங்களில் கஞ்சா போன்ற போதை வஸ்துகள் கடத்தப்பட்டு வருதாகவும் கூறபட்டு வருகிறது. மேலும், ஒரு வாகனத்தில் குறைந்த பட்சமாக நற்பது மாடுகளுக்கு குறையாமல் நூலிழை இடைவெளி கூட இல்லாமல், மாடுகளின் இரண்டு கால்களும் கட்டப்பட்ட நிலையில் வாகனத்தில், முதலில் ஏற்றப்படும் மாட்டின் முன் வரிசையில் கஞ்சா போன்ற போதைவஸ்துகளும் இருப்பு வைக்கப்பட்டு கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

இதனை வழியெங்கும் உள்ள காவல் சோதனை சாவடியில் உள்ள காவல் அதிகாரிகளாலும் ஆய்வு செய்ய முடிவதில்லை. அதே நேரத்தில் ஒவ்வொரு காவல் சோதனை சாவடிகளுக்கான ஒரு நடை முறைகளிலும், அந்த வாகனங்கள் மாடுகள்தானே என்கின்ற ரீதியிலும், இறைச்சிக்காக பலியாகும் மாடுகள்தானே என்று பரிதாபப்பட்டு சோதனையின்றி அந்த வாகனங்கள் அனுப்பப்பட்டு விடுகிறது

இந்த நிலையில், போக்குவரத்து துறையின் செயலாக்க பிரிவு RTO அதிகாரி மற்றும் ஆய்வாளர்களால் சிறைப்பிடிக்கப்பட வேண்டிய, இந்த வாகனங்கள் எல்லாம் சிறை பிடிக்கப்படாமல், ஆந்திராவில் இருந்து சென்னை வழியாகவே மற்ற மாநிலங்களுக்கு செல்வதற்கு ஒவ்வொரு வாகனத்திற்கும் குறிப்பிட்ட ஒரு பெருந்தொகைகள் மாதாந்திர கப்பமாக பெறப்பட்டு போக்குவரத்து செயலாக்க பிரிவு RTOக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதனால், இது போன்ற வாகனங்களுக்கு எந்த தடைகளையும் செய்யாதபடி செயலாக்கப்பிரிவு அதிகாரிகள் தங்களது பணிகளை அமைத்துக்கொள்வதால், சமூக விரோத தொழில்களுக்கான பொருகள் கடத்துவதற்கு, போக்குவரத்து சார்ந்த செயலாக்க பிரிவை சேர்ந்த சில அதிகாரிகளால் பெரும் லஞ்சங்கள் பேரம் பேசப்பட்டு இது போன்ற வாகனத்தில் கஞ்சா கடத்தலுக்கு உதவி வருகின்றனர்.

அதே நேரத்தில் இந்த மனு பொய்யானது என்றும், அல்லது என் மீது ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை கூறி இந்த புகாரை திசை திருப்ப நினைத்தால், காவல் விசாரணை அதிகாரி மற்றும்

போக்குவரத்து விசாரணை அதிகாரிகளுக்கும் என்னால் நேரில் அதாவது, இது குறித்த விசாரணையில் தேவைக்குரிய ஆதாரத் தகவல்கள் எடுத்துரைத்து நிரூபிக்கப்பட்டாலும், தற்போது இதுபோன்ற வாகனங்கள் சிறைப்பிடிக்கப்பட வேண்டும் என்கிற நிலையில், செயலாக்க பிரிவு சென்னை தெற்கு RTO பூங்குழலி அவர்கள் சென்னைக்கு பதவி ஏற்றதில் இருந்து, இதுவரை எத்தனை வாகனங்கள் சிறைப்பிடிக்கப்பட்டது என்ற பட்டியலுக்குள் சென்றால் KA– 59 2057 என்ற பதிவு எண் (பார்க்க: ஆய்வறிக்கை நகல் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட வாகனத்தின் புகைப்படம்) ஒரே ஒரு வாகனம் மட்டுமே சிறைபிடிக்கப்பட்டது என்று தெரியவரும். ஏன் இது போன்ற நானூறு ஐநூறுக்கான வாகனங்கள் உள்ள நிலையில் மற்ற வாகனங்கள் ஏன் சிறைப்பிடிக்கப்படவில்லை இதை அதிகாரிகளின் விசாரணை கவனத்திற்கே விட்டு விடுகிறோம்.

மேலும், பூங்குழலி சென்னைக்குள் பதவி ஏற்ற இந்த ஒரு வருட இரண்டு மாதத்தில் மேற்கண்ட ஒரு வாகனத்தை மட்டும் சிறைப்பிடித்ததற்கும், அந்த வாகன நிர்வாகியான இளங்கோவை 'பழி' தீர்த்து 'பலி' கொண்டதும் ஒரு தனிக்கதை என்பதால் அது குறித்த தகவல்களையும் கூட புகாராக அடுத்தடுத்த பதிவில் விளக்குகிறோம்.

எனவே, கடந்த பல வருடங்களாக இது போன்ற நீள அகல அளவுகளில் வித்தியாசமான, முறைகேடான இந்த வாகனங்கள், சென்னைக்குள் வராத போது தற்போது மட்டும் சென்னை வழியாக பொதுச்சாலையில் இந்த முறைகேடான வாகனத்தை இயக்க வைத்தது யார்? போக்குவரத்தில் மிகப்பெரும் ஊழல் அதிகாரியான பூங்குழலி, ஆய்வாளராக இருக்கின்ற போதே, இது போன்ற வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதலே வழங்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் விசுவாசத்தை நிலைநிறுத்தி சிறைபிடிக்கப்படவில்லையா? அல்லது கஞ்சா கடத்துவதை அறிந்தும் இவருக்குரிய மாமூல் வருவதால் அந்த வாகனங்கள் சிறைபிடிக்கப்படவில்லையா? மேலும், தற்போது சென்னை தெற்குபகுதியில் கூடுதல் அதிகாரத்திற்கான பணிக்குரிய தகுதியில், பூங்குழலி இருக்கிறபோது, சிறைப்பிடிக்கப்பட வேண்டிய இந்த வாகனங்கள் பூங்குழலியால் ஏன் சிறைப்பிடிக்கப்படவில்லை என்பது இவர் கஞ்சா கடத்தலுக்கு துணை போகிறார் என்பதற்கான நிலைகளைத்தான் ஏற்படுத்துகிறது.

இவர் சென்னைக்கு பதவி உயர்வில் பணியிடமாற்றமாக வந்த பின்தான் இதுபோன்ற வாகனங்கள், சென்னை வழியாக பக்கத்து மாநிலத்திற்கு செல்வதற்கான நிலைகள் உயர்ந்துள்ளது என்பதை உயர் காவல் அதிகாரிகள் ஆய்வுக்கு எடுத்தால் அனைத்து உண்மைகளும் தெரியவரும். அது மட்டுமல்லாது இதில் RTO பூங்குழலியின் பங்களிப்பு என்னவென்பதும், இதற்காக அவருக்கு கைமாறும் பணங்கள், எவ்வளவு என்பதும் தெரியவரும் என்பதால், அதனை அறிந்து, இதுபோன்ற வாகனத்தில் கஞ்சா கடத்துவதற்கு பூங்குழலி உதவியுள்ளார் என்பதையும் தெரிந்து, பூங்குழலி மீது கிரிமனல் குற்றவழக்குகளை பதிந்து உரிய நடவடிக்கைக்கு கோருகிறேன்.

மேலும், இவர் சென்னையில் பதவி ஏற்றதில் இருந்து, இதுபோன்ற வாகனங்கள் ஏன் சிறைபிடிக்கப்படவில்லை என்றும், இதுவரை எத்தனை வாகனங்கள் சென்னைக்குள் வந்து சென்றது என்ற ஆய்வுகளையும் மேற்கொண்டும், இதுபோன்ற வாகனங்களை சிறைபிடிக்கப்படாததால் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்புகள் எவ்வளவு என்றும் கணக்கிட்டும், பூங்குழலி மீது துறைரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் கோருகிறோம்.

எனவே, இது போன்ற வாகனங்கள் மூலம் கஞ்சா கடத்துவதற்கு, பூங்குழலியின் உதவிகளால் வரும் வருமானங்கள் கொண்டும், மற்றும் பல ஊழல்களால் வரும் வருமானங்களாலும் தான் இவரது ஆடம்பர வாழ்க்கைகளும், ஆங்காங்கே சொத்துகுவிப்புகளும், இவர்களது புத்திரர்களால் முதலீடு செய்த சினிமா படங்களுக்கான தொழில்களுக்கும் காரணம் என, பல தகவல்கள் பூங்குழலி மீது வரப்படுவதால், வருமானவரித் துறையினரும், ஊழல் தடுப்பு பிரிவினரும் பூங்குழலி மற்றும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவரது புரோக்கர்களின் வங்கி கணக்குகளையும் முடக்கி உரிய நடவடிக்கைக்கும் பணிந்து கோரப்படுகிறது.

பணிவன்புடன்

நெல்லை கோபால்

மூத்த பத்திரிகையாளர்

9994478389

கடித எண். 5

20.08.2022